**NEW SCIENCE ACADEMY**
BMC முன்பாக,
யாழ்ப்பாணம்.
91 A / L
**Weekend Classes**
7.30 - CHE - Mr. சண்
8.30-ZOO Mr. தங்கராஜா
9,30 - PHY - Mr. மணியம்
10,30 ) Pure
12,30 ) App MATHS
Mr. வெக்டர்

பக்கங்கள் எட்டு — விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 131 வெள்ளி 15 06-1990 (ஆனி 01) துல்ஹஸ்தா 21

**NEW SCIENCE ACADEMY**
BMC முன்பாக,
யாழ்ப்பாணம்.
91 A / L
**Weekend Classes**
9.30 - CHE - செல்வரஞ்சன்
10.30 )
12.30 ) BOT-Mr. குணசீலன்
1.30-ZOO-Mr. தம்பிராஜா
3,30 ) Pure
5.30 ) App MATHS
Mr. பிரேம்நாத்

### கிண்ணியாவில் பீரங்கித் தாக்குதல்; பலர் பலி, வீடுகள் பல சேதம்
### அம்பாறையில் நேற்றும் பயங்கரம்

# இராணுவம், குண்டரால் 175 குடும்பங்கள் கொலை

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா படையினரின் அட்டகாசம் நேற்றும் வலுவடைந்திருந்ததாக அறிவிக்கப்படுகிறது. இங்குள்ள மாதிரிக் கிராமம் ஒன்றுக்குள் நேற்று கொலைவெறியுடன் நுழைந்த ஸ்ரீலங்கா இராணுவமும், சிங்களக் குண்டர்களும் அங்கிருந்த 175 தமிழ்க் குடும்பங்களை கண்டதுண்டமாக வெட்டிக் குதறிக் கொன்றனர் என்ற திகில் செய்தி நேற்றிரவு கிடைத்தது.

இதுபற்றிய மேலதிக விவரங்களைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இதேவேளை மட்டக்களப்பு கும்புறுமூலையில் தொடர்ந்து புலிகளுக்கும், ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையே கடும் சண்டை நிகழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிண்ணியாவில் கடற்படையினரின் பீரங்கிப் படகுத் தாக்குதலால் பல பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் பல வீடுகள் சேதமடைந்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இங்கு முஸ்லிம் மக்களே அதிகளவில் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கவசவாகனங்கள், இ. போ. ச பஸ்களில்

# அனுராதபுரத்திலிருந்து ராணுவம் வவுனியா நோக்கி விரைகின்றது

**பிரத்தியேக செய்தி**

அனுராதபுரம் பகுதியிலிருந்து மேலதிகமாக விசேட துருப்புகள் வவுனியா நோக்கி விரைவதாக அறியவருகிறது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் இத்துருப்புகள் கவசவாகனங்கள் மூலமும் ட்ரக்குகள், இ. போ. சபஸ்கள் உதவிகொண்டு பெருமளவில் வவுனியா நோக்கி வருவதாகவும் வவுனியாவில் இவை நிலைகொண்டு போர் முஸ்தீபுகளை மேற்கொள்ளக் கூடும்என்றும்கூறப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க வவுனியா இ. போ. ச டிப்போவுக்கு நேற்று முன் தினம்

—8 ம் பக்கம் பார்க்க

## கிளி. ராணுவ முகாம் முற்றுகை 5 போராளிகள் வீரமரணம்

கிளிநொச்சியில் நேற்று அதிகாலைபொம்பர், ஹெலித் தாக்குதல்கள் நிகழ்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக அதிகாலை 3.10 மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தினர்.

இவ்வேளை ஐந்து போராளிகள் வீர மரணத்தைத் தழுவினர் சிலர் காயமுற்றனர்.

இராணுவமுகாமில்இருந்து புலிகள் பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

ஆயினும் இவற்றின் ரகம் மற்றும் எண்ணிக்கை விவரங்கள் முழுமையாகத் தெரியவரவில்லை.

இராணுவத்தரப்பில் பலர்

— 08 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் ஹெலிதாக்குதல்

கிளிநொச்சியில் நேற்று அதிகாலை தொடக்கம் இடம்பெற்று வரும் இராணுவ முகாம் தாக்குதலால் சந்தைக் கடைகள் முற்றாக எரிந்து சேதம் அடைந்ததுடன் நகர் வெறிச்சோடிக்கிடக்கிறது.

இத்தாக்குதலின்போது இராணுவத்தினரின் ஹெலிகப்டர் தாக்குதலால் சந்தை மைதானத்தில் அமைந்துள்ள

—8 ம் பக்கம் பார்க்க

## ஆறாவது ஷரத்து நீக்கம்; அரசு முடிவேதுமில்லை - ரஞ்சன்

'ஆறாவது ஷரத்தை' நீக்குவது தொடர்பான முடிவு எதனையும் அரசாங்கம் இன்னமும் மேற்கொள்ளவில்லை என்று பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு, ரஞ்சன் விஜயரத்ன நேற்றுக் காலை கொழு

— 08 ஆம் பக்கம் பார்க்க

### யுத்தநிறுத்தமே பிரதான நோக்கம்

## இன்று காலை புலிகளை சந்திக்க ஹமீத் வருகிறார்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நீதியமச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார்.

தற்போதைய சூழ்நிலையில் சண்டையைத் தவிர்த்துச்சமாதான சூழ்நிலையை எவ்விதம் தோற்றுவிப்பது என்பது குறித்து அவர் புலிகள் தலைவர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

எந்தவகையிலும் உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதே அமைச்சரின் விஜய நோக்கம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### இந்தியன் எக்ஸ்பிரஸ் கருத்து

## இந்தியப்படையால் இயலாததை இலங்கைப் படைகள் சாதிக்குமா?

இந்தியப்படைகள் இரண்டு வருடங்களாக இராணுவ நடவடிக்கை மூலம் சாதிக்க இயலாததை இலங்கைப் படைகள் சாதிக்கும் என இலங்கை அரசு நினைப்பது முட்டாள் தனம் என இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

—08ஆம் பக்கம் பார்க்க

## தற்போதைய நிலைமையினால் பிரிட்டிஷ் உதவி நிறுத்தப்படும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கென பிரிட்டிஷ் அரசாங்கம் 140 கோடி ரூபாவை வழங்கவிருந்தது. நாட்டில் அமைதியும் சகஜ நிலையும் மீண்டும் ஏற்பட்டால் மாத்திரமே கொடுப்பதாகச்சொன்ன நிதியுதவியை வழங்குவோம்

— 08ஆம் பக்கம் பார்க்க

பருத்தித்துறை

# நகர மறுசீரமைப்புக்கு காணிகள் சுவீகரிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்குட்பட்ட பகுதிகளில் காணிகளைக் கொள்வனவு செய்பவர்கள் பருத்தித்துறை நகர மறுசீரமைப்புக்குழுவுடன் தொடர்பு கொண்ட பின்னரேயே காணிகளைக் கொள்வனவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

நகர மறுசீரமைப்பு வேலைகளுக்காகச் சில காணிகள் தேவைப்படுவதாகவும் நகர மறுசீரமைப்புக்குழு அறிவித்துள்ளது.

காணிகளைக் கொள்வனவு செய்வோர் தாம் கொள்வனவு செய்யும் காணி நகரமறுசீரமைபுப் பகுதிகளுக்குட்பட்டுள்ளதா என்பதை மறுசீரமைப்புக் குழுவுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது, (15-கி)


கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்
கிளிநொச்சி

## வெற்றுச்சாக்கு கேள்வி கோரல்

மேற்படி எமது சங்கத்தில் 19000 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரம்மூலம் விற்பனைக்கு உண்டு. பெற விரும்புவோர் மீளளிக்கப்படும் பணமாக ரூபாஐந்நூறும் (500.00) கேள்விப் பத்திரத்திற்கு ரூபா ஐந்தும்(5.00) சங்கத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப்பத்திரம்மூலம் 23-06-90-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு பல நோ. கூ. சங்கம், கிளிநொச்சி'' எனும் விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம், அல்லது நேரில் கையளிக்கவும். கடித உறையின் மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி கோரல்'' என எழுதப்படல் வேண்டும்.

இங்ஙனம்
பொது முகாமையாளர்
கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம்
கிளிநொச்சி

06287


கலாசார ஒப்பந்தத்தின் கீழ்

# இலங்கையருககு ஈராக்கில் விசேட புலமைப்பரிசில்கள்

ஈராக்கிற்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார ஒப்பந்தம் விரைவாகச் செயற்படுத்தப்படும்.

ஈராக் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானம் மற்றும் விசேட பாடங்களைக் கற்க ஈராக் அரசு புலமைப் பரிசில்களை இலங்கை மாணவர்களுக்கு வழங்கவுள்ளது. இப் பாடநெறிகள் ஆங்கிலத்திலே போதிக்கப்படும். நாட்டின் எப்பகுதியிலாவது அரபு மொழியைக் கற்பிப்பதற்குத் தகுதியானவர்களை நியமிக்க, ஈராக் தயாராக இருப்பதாகவும், கலாசாரத் தூதுக்குழுக்கள் பரிமாற்றம் செய்து கொள்ளல், சர்வதேச கருத்துப்பரிமாற்றத்திற்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றிற்கும் ஈராக் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(7கி


விலங்கியல்
மாதிரிவினாத்தாள்-90

★ வெளிவந்து விட்டது ★

ஆசிரியர்

R. ஈஸ்வரதாசன்
B. Sc(Cey)

எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும்

மாதிரி வினாத்தாள் விடை வகுப்பு ஆரம்பம்
16-06-90 சனி9.30a.m

PERSONAL CLASSES
B.M.C. முன்லேன்
JAFFNA

06283


## கோரிக்கை

(நாயன்மார்கட்டு)

அரியாலைப் பகுதியிலுள்ள கனகரத்தினம் வீதி திருமகள் வீதி, இராஜேஸ்வரி வீதி மலர்மகள் வீதி சாத்திரியார் லேன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐநூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் தபால்களைப் போடுவதற்கு வசதியாக திருமகள் வீதி கனகரட்ணம் வீதி சந்தியில் தபால் பெட்டி ஒன்றை அமைத்துத் தருமாறு அரியாலை திருமகள் சனசமூக நிலையம் யாழ்ப்பாணம் பிரதம தபால் அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (33கி

# ஆசிரிய வெற்றிடம் இப்பகுதிகளில் இல்லை

யாழ் மாவட்டத்தில் நல்லூர், யாழ்ப்பாணம், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர்ந்த ஏனைய பகுதிகளிலேயே ஆசிரிய வெற்றிடங்கள் தற்பொழுது உள்ளன.

தற்பொழுது வெளிமாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள ஆசிரியர்கள் வெற்றிடம் உள்ள பகுதிகளில் அமைந்திருக்கும் பாடசாலைகளிலேயே நியமிக்கப்படுவார்களென யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.(79கி)

## வண்ணையில் பொங்கல்

வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியில் அமைந்துள்ள ஞான வைரவர் வருடாந்தப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை பி. பகல் 2,00 மணிக்கு நடைபெறும். (கி)

## புதிய தலைவராக நியமனம்

கொழும்புத்திட்ட கவுன்சிலின் தலைவராக இங்குள்ள தாய்லாந்து தூதுவர் அபினன் பவநாரிட் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் 1968 ஆம் ஆண்டுா தாய்லாந்து வெளியுறவு சேவையில் சேர்ந்தார். ஜப்பானிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரிவிலும் பணியாற்றியுள்ளார். 79


# தொழிற் பயிற்சிகள்

★ **Engineering Drawing**
முதலாம் வருட பொறியியல் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்
**Duration:- 4 Months**

★ **Diploma in Draughtsmanship**
a, Engineering Drawing
b, Builders Quantities
c, Engineering Construction
e, Engineering Material
d, Draughtsmanship
**Duration:- 4 Months**

★ **Aircondition & Refrigeration Engineering**
**Duration:- 4 Months**

★ **ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்**
ரேடியோ ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பயறிங் ஆரம்பத்தில் இருந்து செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சி அளிக்கப்படும்

★ **றீவைண்டிங்**
மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர், கிறைண்டர் ஆமேச்சர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:— 4 மாதம்

★ **எலக்ரிக்கல் வயறிங்**
வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:– 2 மாதம்

★ **Spoken English**
i Vocabulary
ii Basic Grammar
iii Reading
iv Writing
v Conversation
vi Etiquette (Manners)

வெளிநாடு செல்வோரின் வசதியை முன்னிட்டு ஒரு மாத முழுநேர வகுப்பாகவும், சனி, ஞாயிறு வகுப்பாகவும் நடத்தப்படும்

மீண்டும் ஆரம்பம்:— சனி, ஞாயிறு. (16.6.90)
கிழமை நாட்கள் ((18.6.90)

குறிப்பு;— Engineering Drawing & Diploma in Draughtsmanship வகுப்புகளுக்கு முன்னர் பதிவு செய்த மாணவர்களும் தொடர்பு கொள்ளவும்.

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA JTI

விபரங்கட்கு:
**JAFFNA TECHNICAL INSTITUTE**
52/1, Stanley Road, Near Railway Crossing
JAFFNA

06273


## காணவில்லை

அரியாலை 103, பூம்புகாரைச் சேர்ந்த நடராசா கிருஷ்ணகுமார் என்பவரை 16-05-90 இல் இருந்து. காணவில்லை. இவருடைய வயது 17, பொது நிறம் இவர் பற்றிய தகவல் அறிந்தோர் கீழ்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நடராசா
103, பூம்புகார், அரியாலை.

06286

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



முருகேசு சுதாகரன் (சுதாகர்)

ஆண்டவன் படைப்பு 08-01-1965
அநியாய அழிப்பு 14-07-1989

திதி- 15-06-1990

அன்பின் பிறப்பே
பண்பின் சிகரமே
மரணம் நிச்சயமானதுதான் -இருந்தாலும் உன்
மரணம் அநீதியின் விளைவு
இறைவனடியில் சேர்ந்து
ஓராண்டு காலமாகிவிட்டதையா!
எத்தனை காலமாகியும் - உன்
நினைவு எம் நெஞ்சை விட்டகலாதையா!
உன் பிரிவால் வாடும்

அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள், மச்சான்மார், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

பலாலி தெற்கு, வயாவிளான். 06282

# இதயநாதம்

வெள்ளிக்கிழமை 15—06—1990


### நல்வாக்கு

உழைப்பது சன்மானம் பெறுவதற்கு என்று நினைத்தால் அவ்வேலை கடினம் போல் தோன்றும்
விசுவாசமும், ஆத்ம திருப்தியும் உழைப்பில் முக்கியம்

டால்ஸ்டாய்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## அவதானத்துடன் கையாளுங்கள்

விஞ்ஞானத்தின் பரிணமிப்பால் இயந்திர யுகத்தை நோக்கி உலகு சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில் ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருட்கள் எனக்கருதப்பட்டவை அனைத்தும் அத்தியாவசியப் பொருட்களாக மாறிக் கொண்டிருக்கின்றன.

அடுப்போடும், நெருப்போடும் கரிபடிந்த நான்கு சுவர்களுக்கிடையே புகைந்து கொண்டிருந்த சமையலறைகள் எல்லாம் விசைகளை அழுத்தி நிமிரும் முன்னரேயே உணவினைப் படைத்திடும் நவீன மின்சார உபகரணங்களைக் கொண்ட சமையலறைகளாக மாற்றம் பெறுகின்றன.

நாளாந்த வாழ்க்கை அமைப்பின் வேகத்திற்கு முகம் கொடுக்க எமது கருமங்களை இலகுவாகவும், வேகமாகவும் செய்யக்கூடிய நவீன மின்சார உபகரணங்கள் அவசியமானவை. இன்றியமையாதன ஆனால் அவற்றைக் கையாளும் போது நிதானத்துடனும், அவதானத்துடனும் கையாளல் அவசியமாகும்.

கவலையீனமான பாவனையால் உயிரிழப்புக்கள் நேரும் சாத்தியக்கூறுகள் நிறையவுண்டு.

அண்மையிற் கொழும்பையே உலுக்கிய பரிதாபச்சம்வம் எமக்கும் பாடமாக அமையட்டும்.

கொழும்பு நாவலவில் வசிகக்கும் 28 வயது நிரம்பிய திருமதி ஹெலரின் மொகமட் என்ற விமானப் பணிப்பெண் ஒரு திருமண வீட்டிற்குச் சென்று நள்ளிரவில் வீடு திரும்பியதும் கோப்பி தயாரிக்கக் காஸ் அடுப்பினைப் பற்றவைத்தபோது அவரது உடையில் சில்க் துணியிலான இடைப்பட்டியில் தீப்பற்றிக் கருகி மாண்டார். அவரது கணவரும் இந்த விபத்தில் எரிகாயம் அடைந்தார். ஒரு கவனயீனமான சம்பவம் அந்த இளம் தம்பதியினரின் வாழ்க்கையையே திசை திருப்பிவிட்டது.

காஸ் அடுப்பு விபத்துக்கள் பயங்கரமானவை. இவையனைத்துக்கும் கையாள்பவரின் கவனயீனமே காரணமாக அமைகின்றது.

காஸ் அடுப்பினைப் பயன்படுத்தி முடிந்ததும் சரியான முறையில் காஸ் கசியாது அதனை நிறுத்த வேண்டும். காஸ் கசிவு ஏற்பட்டாற் சிறுதணல் நெருப்புக்கூட அந்த இடத்தையே சாம்பலாச்கி விடலாம்.

மேலும் மின்சார உபகரணங்கள் போன்றவற்றைச்சிறுவர் பாவனைக்கு எட்டாத இடத்தில் வைத்தல் அவசியம். அதேவேளை வீட்டு மின் சுற்று பாதுகாப்பான முறையில் அமைக்கப்படுதலும் அவசியமாகும்.

நெருப்புடன் வேலை செய்யும்போது எளிதில் தீப்பற்றாத ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள் எந்தவொரு விபத்தும் ஏற்பட்ட பின்னர் கவலைப்படுவதை விடுத்து முன்னெச்சரிக்கை, அவதானத்துடன் செயலாற்றி விபத்துக்களைத் தடுங்கள்.

உங்களதும், உங்களைச் சார்ந்தவர்களதும் உயிர்கள் பெறுமதியானவை. எனவே அஜாக்கிரதை உங்கள் வாழ்வை மாற்றியமைக்க இடமளியாதீர்கள்.

தீ அல்லது மின்சார அதிர்ச்சி ஏற்படும் சமயங்களில் நிதானத்துடன் அவற்றை அணைக்க முயலுங்கள். இவ்வகையான விபத்துக்களுக்கான முதலுதவிகளைப்பற்றி உங்கள் பகுதிச் சுகாதார அலுவலகங்கள், வைத்திய அதிகாரிகள் மூலம் அறிய முயற்சியுங்கள்

எதிர் காலத்தில் மின்சார உபகரணங்களோடே நாம் வாழப்போகின்றோம், எனவே இவைபற்றிய அறிவும், விபத்துக்களைத தவிர்க்கும் வழிகளை உணர்வதும் எமது இன்றியமையாத தேவைகளாகும்,

மின்சாரம் என்பது சிறந்த ஊழியன், ஆனால் தீய எஜமான், எனவே அவதானத்துடன் கையாளுங்கள்,

### நலம் தரும் நித்திரை

# தூங்காது விழிக்கும் கண்களே.. கொஞ்சம் துயில் கொள்ளுங்களே!

நித்திரை ஒரு மனிதனின் நல வாழ்விற்கு, மிகவும் அவசியமானது. போதிய நித்திரை இல்லாத மனிதன், நல வாழ்வு குன்றிஇருப்பது இயல்பானது. ஒரு குழந்தை, எத்துணை அதிகமாகத் தூங்குகின்றதோ, அந்த அளவிற்கு அது நோயற்று, ஆரோக்கியமாக நீண்ட ஆயுளுடனே இருக்கும்.

### ஜீரணம் நன்றாக நடைபெற

ஜீரண உறுப்புகள் நன்றாக வேலை செய்வதற்கும் நமது நித்திரைக்கும் தொடர்பு உண்டு. நன்றாகத் தூங்கி எழுந்தாலே. எத்தனை சாப்பிட்டாலும், ஜீரணமாகி விடும். குழந்தைகளுக்கு அஜீரணக் கோளாறுகள் உள்ள போது, அவர்களை நன்றாகத் தூங்க வைத்து விட்டாலே, பாதி ஜீரணத் தொந்தரவுகள் சரியாகி விடும்.

### மாணவர், அலுவலக ஊழியர் நிலை

மாணவ சமுதாயத்தினர், அலுவலகங்களில் வேலைசெய்கின்றவர்கள் சிலர் விடிய விடியக் கண் விழித்து எழுதுவது, படிப்பது, ஆபத்தாகும் மூளைக்கும் ஓய்வு வேண்டும். மூளை ஓய்வு பெற்றால் தான் ஞாபக சக்தியைப் பெற முடியும். நினைவில் பதித்துக் கொள்ளக் கூடாமல், விடிய விடியப் படித்ததையே திரும்பத் திரும்ப படித்தால் யாது பயன்...? இதனால் கண் பாதிக்கப் பெறும். மூளைக் கோளாறுகள் தான் வரும்.

பள்ளி ஆரம்பமானது முதல் கவனமாகப் படிக்காமல் தேர்வு காலங்களில், விடாம கண் விழித்து, இரவு பகல் படித்து. மூளைக் கோளாறுகள் உண்டாகியபின்னர், தேர்வில் உட்கார முடியாத நிலை உண்டாகிய மாணவர்களையும் நாம் பார்க்கின்றோம்.

### நோயாளிகளுக்கு அத்தியாவசியமானது

நோயுள்ளவர், உதாரணமாக இருதயநோய், இரத்தச் சோகை, காமாளை, வாத சம்பந்தமான நோய் உள்ளவர்கள் இரவில் கண் விழித்து மிகுதியான நேரம் படித்துக் கொண்டிருப்பது ஆபத்தாகும். இவர்கள் இரவில் நன்றாக அயர்ந்து தூங்க வேண்டும்.

அதிகாலையில், மிக அமைதியான வேளையில் மாணவர்கள் நான்கு அல்லது ஐந்து மணிக்குள்ளாக எழுந்திருந்து சிறிது நேரம் படிக்கலாம்.

7 -ஆம் பக்கம் பார்க்க

# ஜனநாயகத்திற்கு பதிலாக தர்மநாயகம்

சுவீடன் நாட்டு உப்சல பல்கலைக்கழகத்துப் பல்வேறு சமயங்களின் நோக்கை ஒப்பீடு செய்யும் பீடத்தின் பேராசிரியராக இருக்கும் பீற்ற சோக் என்பவர் கொழும்பிலிருந்து வெளியாகும் லங்காகாடியன் என்னும்ஆங்கிலச்சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரையின் சாராம்சத்தின் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது.

1988-ஆம்ஆண்டுநவம்பர் மாதம்ஸ்ரீலங்காமகாசங்கத்தினர் சமர்ப்பித்த மகஜர் அதாவது புத்தசாசனத்துக்கு இலங்கையில் அளிக்கப்பட வேண்டிய (ஒப்பு உயர்வு அற்ற) அதியுயர்ந்த ஸ்தானத்தை விளக்கிகூறுமுகமாக தயார் செய்த அறிக்கையை ஆராயும் பொழுது மகா சங்கத்தினர் பகிரங்கமாகமக்கள்மத்தியில் புத்தமதத்து பெரும்பான்மையினத்தவருள் ஒருவருக்கு இத்தீபகற்பத்தில் வாழும் ஏனையோரிலும் பார்க்க மிக்க சமத்துவம் (more equality) தரப்பட வேண்டும் என்று கூறினாலும் மகாசங்கத்தினரின் உண்மையான எதிர்பார்ப்பு ஒரு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட புத்த மதத்தைச் சார்ந்த ஒருவருக்கு பிற இனமதத்தைச் சேர்ந்த ஒருவரிலும்பார்க்க அதி உயர்ந்த ஸ்தானமே (most Superior or foremost position) ஆகும்.

அவர்கள் சமர்ப்பித்த மகஜரில் விடுத்த வேண்டுகோளை இதன் கீழ் தரப்படுகின்ற எட்டு கூறுகளாக தொகுக்கலாம்.

1) மகா சங்கத்தினரே யாவருக்கும் மேலான உச்ச உயர்நிலைக்குரிய அமைப்பாக இருப்பதால் பௌத்த சாசனத்தின் எதிர்காலம் ஏனைய மதங்களிலும் பார்க்க வெறும் கூடிய சமத்துவம் (More Equality) வழங்கப்படுதல் போதாது. பௌத்த சாசனத்திற்கு பிரத்தியேகமான, ஒப்பு உயர்வு அற்ற ஒரு அதியுயர்ந்த ஸ்தானம் வழங்கப்படவேண்டும்.

புத்த சாசனத்திற்கு ரீதியாகவோ அல்லது சர்வதேச ரீதியாகவோ எந்த ஒரு அவப் பெயரையோ அல்லது இழிவினையோ உண்டு பண்ணும் வகையில்

## பௌத்த மகாசங்கம் அரசுக்கு சமர்ப்பித்திருக்கும்கோரிக்கைகள்

அவன் பரப்புகை, மறு சீரமைப்பு, அபிவிருத்தி நிர்வாகம் என்பவை போன்ற சகல விடயங்களில் மகா சங்கத்தினருடைய மதிப்பார்ந்த கருத்துக்கள் பெறப்பட வேண்டும் - அவ்வாறு பெற்ற கருத்துக்களுக்கு அதி உயர்ந்த மதிப்பு அளிக்கப்படவேண்டும்

புத்த சாசனத்துக்கு எந்த ஒரு நடவடிக்கையும் அமைந்து விடக்கூடாது.

இலங்கையின் தேசிய பொருளாதார ஒழுங்கமைப்பு பௌத்த மத கோட்பாட்டுக்கு இணைந்தவையாக இருக்கும் வண்ணம் மறு சீரமைக்கப்பட வேண்டும்.

ஒழுக்கம் சார்ந்த கல்வி பற்றியும் அறிவும் இன்றைய கால கட்டத்திற்குத் தேவையான தொழில் நுட்ப அறிவை வளர்க்கும் கல்வித் திட்டங்கள் புத்த மத கல்விக் கோட்பாட்டுக்கு அமைவாக இருக்க வேண்டும். பிள்ளைகளின் மனதில் சிறிது சிறிதாக வேனும் கொடூர மனப்பான்மையை புகட்டும் எந்த ஒரு ஜீவனோபாய தொழிலுக்குமான பாடத்திட்டத்தையும் பாடத்தில் சேர்க்கப்படக் கூடாது.

பௌத்த அடிப்படை நெறிக்கு இசைவுடையனவாக இருக்கும்வகையில் நாட்டின் சட்டங்கள் ஆக்கப்படவேண்டும்.

மது அருந்துதல், சூதாடுதல் போன்ற ஒழுக்கமற்ற, நெறியற்ற செயல்களை அரசாங்கம் ஆதரிக்கக் கூடாது. இவை போன்ற பாவச் செயல்களைமேம்படுத்தஅல்லது பிரசாரம் செய்ய பத்திரிகை வானொலி போன்ற தொடர்பு சாதனங்கள் உபயோகப் படுத்துவதை அரசு நிறுத்த வேண்டும்.

இலங்கையில் இன்றுள்ள தொலைக்காட்சிவானொலி புதினப்பத்திரிகை போன்ற வெகுஜனத் தொடர்பு சாதனங்கள், புத்த சாசனத்தின் அருமை பெருமைகளை மட்டம் தட்டும் வகையில் நடந்துகொள்ளக் கூடாது. புத்த மதத்தின் அருமை பெருமைகளைஎடுத்துக்கூறி அவற்றைப் பேணிப் பாதுகாக்கவேண்டும்.

மேற் கூறியவற்றை சிந்தித்து பார்க்கும் போதும் இலங்கையில் இன்று நடைமுறையிலிருக்கும் ஜனநாயகம் (Democracy) என்பதற்குப் பதிலாக பௌத்த தர்மமே அரசியல்சாசனமாக ஆட்சி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப் பட்டுள்ளது. இதை ஒரு வகையில் ஜனநாயகத்திற்கு (Democracy) பதிலாக தர்மநாயகம் (Dharma cracy) என்று அழைக்கக் கூடிய ஒரு புதிய அரசியல் சித்தாந்தம் உருவாகின்றது.

இனங்களிடையே முரண்பாடு உள்ள இன்றைய கால கட்டத்தில் அசோகச் சக்கரவர்த்தி சென்ற அடிப்படையில் சென்று இனங்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முயலும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு மகா சங்கத்தின் 'தர்மநாயகம்' முட்டுக்கட்டை போடுகிறது

# ஆன்மீக மாலை

## நவரத்தின மாலை

1. நன்றாகப் பழுத்துத் தொங்கும் பழங்களைக் கொண்ட மரம் தாழ்ந்து வளைந்து காணப்படும். பழுக்காத பிஞ்சுக் காய்களைக் கொண்ட மரம் நேராக நிற்கும். அது போல் ஆன்மீகத்தால் பழுத்த யோகிகளும், ஞானிகளும் பணிவன்புடன் காணப்படுவார்கள். ஞானமடையாத அரை குறையுடன் படித்தவர்கள் கர்வத்துடன் தலை நிமிர்ந்து நிற்'ார்கள்.

—ஸ்ரீ புத்தர்

2. உண்மையற்றதைச் சொல்வதை விட மௌனமாக இருப்பதே மேல். அவதூறு பேசி இன்பம் அடைவதைக் காட்டிலும் உயிரைத் தியாகம் செய்வதே மேலாகும். மற்றவனிடம் இருந்து திருடிய பொருளைக் கொண்டு சுகம் அனுபவிப்பதைக் காட்டிலும் பிச்சை எடுத்து வாழ்வதே மேலானது.

—ஸ்ரீ சின்மயானந்தர்

3. இறைவன் அனைவருக்கும் பொதுவானவர். அதில் பேதமில்லை. மின் விசிறிக்கும், விளக்கிற்கும் அமைப்பில் வேற்றுமை உள்ளது! அவைகளை இயங்க வைக்கும் பொதுச் சக்தி மின்சாரம் தானே? அந்த மின்சாரத்தைப் போன்றவர் தான் இறைவன்.

—புட்டபர்த்தி ஸ்ரீ சத்திய சாயிபாபா

4. சஞ்சலமாகிய சேற்றில் வழுக்கி வழுக்கி விழுந்து கொண்டிருக்கிறோம். சேற்றிலிருந்து எழுந்திருக்க வேண்டுமென்றால் சேற்றில் நம்மைப் போல் புதைபடாமல் கரையில் இருக்கும் ஒரு கெட்டியான வஸ்துவை பிடித்துக்கொண்டால் தான் கரையேற முடியும். அந்தக் கெட்டியான வஸ்துவே ஈஸ்வரன்.

—காமகோடி ஸ்ரீ சங்கராச்சாரியர்

5. எவன் ஒருவன் முழுமனதுடன் பூரண உள்ளத்தினின்று வரும் பிரார்த்தனையுடனும் ஆழ்ந்த ஆவலுடனும் தானாகவே கடவுளை நெருங்க வல்லவனோ அவனுக்குக் குரு அவசியமாவதில்லை. ஆனால் அவ்வளவு ஆழ்ந்த ஆவல் பூண்ட ஜீவன் அதி துர்லபமாகும். ஆகவே தான் குரு ஒருவர் அவசியமாகிறார்.

—ஸ்ரீ ராம கிருஷ்ணர்

6. சிறிய பொருளாக இருப்பினும் பெரியவர்களை அடைந்தால் அது பெருமையடைகின்றது. பெரிய பொருளேயாயினும் சிறியவர்கள்பால் சேர்ந்தால் அவர்களால் அப்பொருளுக்குப் பெருமையுண்டாவதில்லை. சேரப் பெற்றவனும் சிறப்படைவதில்லை. ஆலகால விஷம் சிவபெருமானையடைந்து அவருடைய கண்டத்தில் பெருமையுற்றது. அமிர்தம் ராகுவைச் சேர்ந்து பெருமையடையவில்லை.

—ஸ்ரீ கிருபானந்தவாரியார்

7. உலகில் எதிலுமே நமக்குப் பற்று தேவையில்லை. செல்வமோ, வறுமையோ, மகிழ்ச்சியோ, துன்பமோ, வாழ்வோ சாவோ, பெருமையோ சிறுமையோ, அறமோ மறமோ, நண்பனோ, மனைவியோ, குழந்தைகளோ, நாடோ, நமது வேலையோ, பணியோ, சொர்க்கமோ, பூமியோ இவற்றிலுள்ள அல்லது இவற்றைக் கடந்த எதிலும் நமக்குப் பற்று வேண்டியதில்லை.

—ஸ்ரீ அரவிந்தர்

8 தாய் தன் எல்லாக் குழந்தைகளிடமும் ஒரே விதமான அன்புதான் பாராட்டுகிறாள். இருபது வயது மகனுக்கு அதிக ரொட்டியும். இரண்டு வயதுக் குழந்தைக்கு ஒரு ரொட்டியும் அவள் கொடுத்தால் இதை ஏற்றத்தாழ்வு என்று கூற முடியுமா? இதனைத்தான் விவேகம் என்போம். இந்த விவேகம் எல்லா மக்களுக்கும் இருக்க வேண்டும்.

—ஸ்ரீ வினோபாபாவே

9. தனக்காகச் செய்யும் காரியங்களை விலக்குவதே துறவு. ஒரு குடும்பத்தை விட்டு வருகிற துறவிக்கு உலகமே குடும்பமாகி விடுகிறது.

—ஸ்ரீ ரமணர்

(நன்றி - அமுதசுரபி)

## சிறப்புக்குரியது

மநுஷ வேஷம் பிரமாதமாய்ப் போட்டவர் ராமர். சீதையை ராவணன் கொண்டு போய் எங்கே வைத்திருக்கிறான் என்று தெரியாத மாதிரியே நடித்தார். சொல்லி முடியாத் துக்கப்பட்டார். அப்போது அவள் இருக்கிற இடத்தைக் கண்டு பிடித்துச் சொல்லி இவருக்கு உற்சாகமும், தெம்பும் பலமும் தந்தது யார் என்றால் ஆஞ்சநேய ஸ்வாமி தான்.

சீதையைப் பிரிந்து இவர் பட்ட துக்கத்தைவிட, இவரைப் பிரிந்து சீதை பட்ட துக்கம் கோடி மடங்கு. பிரிய பத்தினி பக்கத்தில் இல்லையே, தன்னைப் பிரிந்து அவள் கஷ்டப்படுவாளே என்ற கஷ்டம் மட்டும்தான் ராமருக்கு. ஆனால் அவளுக்கோ இதோடு ராக்ஷஸ ராஜ்யத்தில் மஹா காமுகனால் சிறை வைக்கப்பட்டிருப்பதால் மஹா கஷ்டமும் சேர்ந்திருந்தது. 'அபலா' என்றே ஸ்திரீக்குப் பெயர் ஸாக்ஷாத் ஜகன் மாதாவான மஹா லக்ஷ்மி சீதையாக வந்து அபலையிலும் அபலையாக அசோகவனத்தில் படாத கஷ்டப்பட்டு, அந்தக் கஷ்டத்திற்கு முடிவு பிராணனை விடுவது தான் என்று சுருக்குப் போட்டுக்கொள்ள இருந்தபோது அவளுக்கு உற்சாகத்தை, தெம்பை, பலத்தைத் தந்தது ஆஞ்சநேயர் தான்.

அவர் செய்த அருஞ் செயல்கள் ஒன்றில்லை, இரண்டில்லை, ஆனால் இதற்கெல்லாம் சிகரமாக எதைச் சொல்லலாமென்றால் இந்த லோகம் முழுவதற்கும் ஸ்ரீயைக் கொடுத்து சௌபாக்கியத்தைக் கொடுத்து அநுக்ரஹிக்கும் தாயார் மனம் குலைந்து மட்கிக் கிடந்தபோது ஆஞ்சநேய ஸ்வாமி காய்ந்த பயிருக்கு மழையாகப் போய் அவளுக்கு உயிரும், உற்சாகமும் தந்தாரே அதுதான் ஜானகி சோக நாச நம்'' என்று இதைத்தான் சிறப்பித்துச் சொல்கிறோம்.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

### அரசும் அதிகார துஷ்பிரயோகம்

# பிரித் ஓதப்பட்ட தினத்தில் பிணங்கள் எரிந்தன - வாசு

''அரசாங்கமும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறது' என்று திரு. வாசுதேவ நாணயக்கார எம் பி பாராளுமன்றத்தில் பேசுகையில் குற்றம் சுமத்தினார்.

'இம்மாதம் 10ம்திகதி கொழும்பில் இனந் தெரியாதோரால் ஓர் இளைஞர் கடத்தப்பட்டுள்ளார். பொசன் போயா தினத்தில் எகலியகொடையில் பிணங்கள் காணப்பட்டன. இனந்தெரியாதோரின் அசாதாரண நடமாட்டமும் இருந்தது மிகிந்தலையிலிருந்துபிரித் ஓதப்பட்ட தினத்தில் எகலியகொடை, கிரியெல்ல பொலிஸ் பகுதிகளில் மூன்று இடங்களில் பிணங்கள் எரிந்தன'' என்றும் அவர் சொன்னார்.

திரு அனுராபண்டார நாயகா பேசுகையில் ''பொலிஸ் நிலையங்களைக் கைப்பற்றும் புலிகள் அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்வதற்கு நாட்டின் ஜனநாயகக் கட்சிகளிடமிருந்து ஆதரவை எவ்வாறு எதிர் பார்க்க முடியும்'' என்று கேள்வி எழுப்பினார்.

புலிகள் தங்களது போராளிகளில் 2500 பேரை கடந்த சில நாட்களாக மட்டக்களப்பு பகுதிக்கு நகர்த்தியிருந்தார்கள்.

புலிகள் மேலும் பலம் பொருந்திய தாக்குதலை தொடுக்கத் தயாராகிறார்கள் அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்' என்றும் அவர் சொன்னார். (ஸ்ரீ)

## இருக்கக்கூடாத இடத்தில் இருக்கும் மின்விசிறி

(மூளாய்)

வட்டுக்கோட்டை உப அலுவலக பொது நூலகத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்விசிறி மிகவும் பழையதானதால் பெரும் இரைச்சலுடனேயே வேலை செய்கின்றது.

இதனால், இந் நூலகத்தில் வாசிக்க வருபவர்கள் இப்பேரிரைச்சலினால் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

நூலகங்களில் அமைதி நிலவ வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றது. ஆனால் இங்கோ உள்ள அமைதியையும் இந்த மின்விசிறி கெடுத்து வருகின்றது. (ப — 1 கி)

## பாவனையாளர் சங்க கருத்தரங்கு

(காங்கேசன்துறை)

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச பாவனையாளர் சங்கத்தின் கருத்தரங்கு ஒன்று 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30க்கு யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது. பாவனைப் பொருட்கள் விநியோகத்தில் உள்ள ஒழுங்கீனம் பற்றியும் சங்கத்தின் நடைமுறை விடயங்கள் பற்றியும் இதில் கலந்தாலோசிக்கப்பட உள்ளது. (ப-10 கி)

## கலைஞர் கௌரவிப்பு

(காவலூர்)

வேலணையில் நடைபெற்ற கோட்டக்கல்வி கவின் கலை விழா மேடையில் இசையமைப்பாளரும் கவிஞரும் கல்வி ஆலோசகருமான பொன் ஸ்ரீ. வாமதேவா பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டார் அழகியல் துறை கல்வி அதிகாரி கணபதிப்பிள்ளை இவருக்கு பதக்கத்தை சூட்டி கௌரவித்தார் (24 கி)

## வேலணை கோட்டம் கலை நிகழ்ச்சி

வேலணை கோட்டக்கல்வி இசை, நடன, சித்திர ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட கலை நிகழ்ச்சியும் கண்காட்சியும் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் ஏராளமான மாணவர்கள் பங்கு பற்றினர்.

வேல் ஆனந்தனின் மாணவனின் நாட்டிய நிகழ்ச்சி உட்பட பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (79கி)

## மருதங்கேணிக்கு ஜெனரேட்டர்

(முள்ளியான்)

மருதங்கேணி கிராம வைத்தியசாலைக்கு ஜெனரேட்டர் ஒன்று விரைவில் வழங்கப்பட உள்ளது.

யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்தது.

இக்கிராம வைத்தியசாலை அரிக்கன் லாம்புகளுடனேயே தனது சேவையை மேற்கொள்கிறது.

இப்பகுதிப் பொது ஸ்தாபனங்களினதும்வைத்திய அதிகாரிகளினதும் தூண்டுதலின் முயற்சியினாலேயே இவ் ஜெனரேட்டர் இயந்திரம் வழங்கப்பட உள்ளது. (43கி)

### காங்கேசன் களஞ்சியத்துக்கு

## நேரடியாக உரம் அனுப்ப அரசிடம் கோரிக்கை

காங்கேசன்துறையிலுள்ள உரக்களஞ்சியத்திற்கு உரத்தை நேரடியாக அனுப்பி வைக்குமாறு உரக் கூட்டுத்தாபனத்திடம் யாழ் மாவட்டக் கமநல சேவைத் திணைக்களம் கோரியுள்ளது.

தற்போது யாழ் மாவட்டத்திற்குத் தேவையான உரம் அனுராதபுரம் உரக்களஞ்சியத்தில் பெற்றுக் கொள்ளப் படுகிறது. இதனால் போக்குவரத்துச் செலவினங்களும், தாமதமும் ஏற்படுகின்றன. அதே வேளை உரக் களஞ்சியம் பயன்படுத்தப் படாமல் இருக்கிறது.

இது தொடர்பான வேண்டுகோளை யாழ் மாவட்டக் கமநலசேவைத் திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் உரக் கூட்டுத்தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளார். (8கி)

## உள்ளூராட்சி தேர்தலைக் கவனிக்க வெளிநாட்டு அவதானிப்புக் குழு?

விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைக் கண்காணிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைப்பது தொடர்பாக அரசின் கவனம் திரும்பியுள்ளது,

கடந்த தேர்தல்களின் போது கிடைத்த அனுபவத்தைக் கொண்டு இவ்வாறு வெளிநாட்டுக்கண்காணிப்புக் குழுக்களை அழைப்பது மிகமுக்கியமானதென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிஉட்பட பிரதான இடதுசாரி முன்னணி இத் தேர்தலில் வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவை ஈடுபடுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடவுள்ளது

இதன் அவசியம்பற்றிஅரசாங்கம் தற்பொழுது ஆராய்ந்து வருகின்றது. (7.கி)

### கத்தி, வாள் சகிதம்

## இரவுநேரக் கொள்ளைகள் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ் குடாநாட்டில் இரவு நேரங்களில் இடம்பெறும் வழிப்பறிக் கொள்ளைகள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரங்களிலும் அதிகாலை நேரங்களிலுமே இந்த வழிப்பறிக் கொள்ளைகள் இடம்பெற்று வருகின்றன.

இக்கொள்ளைக்கு கிறிஸ் கத்தி, பொல்லுத்தடி, வாள் போன்ற ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. குறிப்பாக மோதிரம் கைக்கடிகாரம் சைக்கிள்கள் போன்றவைகளே இக்கொள்ளை மூலம் அபகரிக்கப்பட்டு வருகின்றன எனத்தெரிவிக்கப்படுகிறது. (03-ஸ்ரீ)

## ஐ. நா. ஸ்தாபன உதவியுடன் மேலும் 10 சுகாதார நிலையங்கள்

யாழ். கிளிநொச்சி பிராந்தியங்களில் ஐக்கியநாடுகள் அகதிகள் புனர்வாழ்வு ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் மேலும்பத்து ஆரம்பசுகாதார நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட நிதிஒதுக்கீட்டிலிருந்து யாழ் மாவட்டத்தில் ஆறும், கிளிநொச்சி மாவட்டத்தில் நான்குமாக மொத்தம் பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களைநிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது, 1989க்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பத்து ஆரம்பசுகாதார நிலையக்கட்டிட வேலைகள்யாவும் துரிதமாகமேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவேஐந்துசுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. (4,75கி)

### யாழ் மாவட்டத்தில்

# இரண்டேகால் லட்சம் மாணவருக்கு மதிய உணவு முத்திரைகள் கிடைக்கும்

யாழ் மாவட்டத்தில்மொத்தமாக இரண்டு லட்சத்து இருபதினாயிரத்து முன்னூற்று முப்பத்தொன்பது (220,339) மாணவர்கள், பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவிற்கான முத்திரைகளைப் பெறவிருக்கின்றார்கள்.

மேற்படி உணவு முத்திரைளைப் பெற்றுவர யாழ் அரசு செயலகத்தின் உயர் அதிகாரிகள் கொழும்பு சென்றுள்ளார்கள். இந்த முத்திரைகள் யாவும் இவ்வார இறுதிக்குள் யாழ்செயலகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

ஒவ்வொரு உதவி அரசஅதிபர் பிரிவுகளிலும் மேற்படி முத்திரைகளைப் பெறுவோர் தொகை வருமாறு:-

கரவெட்டி- 14800, பருத்தித்துறை- 16,500, கோப்பாய்- 18,942, நல்லூர்- 22,926, உடுவில்-1 5,100, நெடுந்தீவு- 1447.

சாவகச்சேரி- 23,434, மருதங்கேணி- 4,584, யாழ்ப்பாணம்- 28,669, தெல்லிப்பழை 22,215, வேலணை- 12,885, சங்கானை-11,374, சண்டிலிப்பாய்- 17,939, ஊர்காவற்றுறை- 9,524 ஆகும்.

இம்முத்திரைகள்ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் மூலமாகப் பாடசாலை அதிபர்களுக்கு விநியோகம் செய்யப்படும் என்று தெரிகிறது. (47

## யாழ்ப்பாணத்திற்கு 'பழுதான திரிபோஷ'

கொழும்பிலுள்ள 'கெயர்' நிறுவனம் யாழ் சுகாதார திணைக்களத்திற்கு கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள 'திரிபோஷ' மா பழுதடைந்து பாவனைக்கு தகுதியற்ற நிலையில் உள்ளது.

மூன்று மாத இடைவெளிக்குப் பின்பு கடந்த வாரம் கெயர் நிறுவனம் ரயில் மூலம் 1882 பெரிய பக்கற் 'திரிபோஷ' மாவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

யாழ் சுகாதார திணைக்கள லொறி மூலம் இந்த மா யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகங்களுக்கும் உடனடியாக கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப் பட்டது.

வைத்திய சாலைகளில் சிறுவர் நல சிகிசசை கிளினிக்குகளிலும், கர்ப்பிணிகள் சிகிச்சை கிளினிக்குகளிலும் இந்த மாவை போஷாக்கு குறைந்தவர்களுக்கும், நிறை குறைந்தவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படுவது தெரிந்ததே.

இம் முறை வழங்கப்பட்ட இந்த மாவில் துர் நாற்றம் வீசுவதாகவும், வண்டுகள் காணப்படுவதாகவும் நிறம் மாறி பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. (13கி)

## பல்கலைக்கழக அனுமதிக்கு இப்போது விண்ணப்பிக்கலாம்

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதியின் பொருட்டு1989டிசம்பர்மாதம் நடை பெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஆகக் குறைந்ததேவைகளைத்திருப்தி செய்துள்ளபரீட்சாத்திகளிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கட்டடக்கலைக்கற்கை நெறியின் பொருட்டு அனுமதிக்காக கருத்திற் கொள்ளப்பட விரும்பும் பரீட்சாத்திகள் இதற்கு மேலதிகமாகமொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உளச்சார்பு பரிட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது, இவ் உளச்சார்பு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரி அப் பல்கலைக் கழகத்தினால் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும்.

பல்கலைக்கழகம் ஒன்றிற்கு அனுமதியை நாடும் பரீட்சர்த்தி ஒருவர் ஆகக் குறைந்தது நான்கு பாடங்களிலும் மொத்தத் திரட்டு 180 புள்ளிகளுக்குக் குறையாமற் பெற்திருத்தலோடு 1989 டிசம்பர் மாதம் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் ஒரே முறையில் அங்கீகரிக்கப்பட்டநான்கு பாடங்களிற் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது; 1989 டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ. த உயர்தரப் பரீட்சையில் ஒரே முறையில் குறைந்தது அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களிற் சித்தி பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நான்காவது பாடத்தில் 25% புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றிருத்தல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனுமதி தொடர்பில் செய்யப்படும் சகல விண்ணப்பங்களும் சிரேஷ்ட. உதவிச் செயலாளர் அனுமதிகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல; 20உவாட்டு இடம், கொழும்பு—7 என்ற முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப் படிவத்தில் செய்யப்படல் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் ஜூலை மாதம் 14ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7.கி)

### அமைச்சரின் தொகுதியாக இருந்தும்

## தமிழ்த்தினப் போட்டியில் வவுனியாவுக்கு இடமில்லை

கொழும்பில் இம்மாதம் 15-ம், 16-ம் திகதிகளில் நடைபெறவுள்ள தமிழ்த்தினப் போட்டிகளில் வவுனியா மாவட்டத்தினைச் சேர்ந்த ஒரு மாணவனும் கலந்து கொள்ளச்சந்தர்ப்பம் இல்லை வவுனியாவில் உள்ள கல்வித் திணைக்கள உயரதிகாரிகளின் அசிரத்தையே இதற்குக் காரணம் எனப் பெற்றோர் புகார் தெரிவித்தனர்.

கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இ. புலேந்திரன் இவ்விழாவை கொழும்பில் நடத்தப் பெரு முயற்சி எடுக்கும் வேளையில் அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் வவுனியா மாவட்டத்திலிருந்து ஒரு மாணவன் கூட அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் பங்குபெறாதது துரதிஸ்டமே எனவும் பெற்றோர் கவலை தெரிவித்தனர். (11)

## உலகவங்கிகுழு கிளி.வருகிறது

உலக வங்கியின் நிபுணர் குழுவொன்று இம் மாதம் 28-ம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்து இரணைமடுக் குளத்தை பார்வையிட்டு மேற்படி நீர்ப்பாசனத் திட்டத்தில் பாரிய புனருத்தாரண வேலைகளை மேற் கொள்ளவுள்ளது

நீர் முகாமைத்துவ நீர்ப்பாசன பணிப்பாளர் பி. செனரத்தினா தலைமையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் இக் குழுவை கிளிநொச்சி அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் தலைமையில் இரணைமடு திட்டமுகாமையாளர் வி. கதிரவேலு மற்றும் உயர் அதிகாரிகள் வரவேற்பர்.

## தங்கப் பதக்கம் பெற்றார்



கொழும்பு விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய அகில இலங்கை இந்துசமயப் போட்டிகளில் மத்திய பிரிவு பண்ணிசையில் செல்வி. ஜெயபாரதி நவரத்தினம் முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

இவர் கரவை சைவநெறிக் கழக உறுப்பினரும், வதிரி பூவற்கரை, தட்டுக்களரி விநாயகர் அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் ஆலய பண்ணிசைக் குழுவைச் சேர்ந்தவரும் பருத்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் தற்பொழுது க. பொ. த. வகுப்பில் கல்வி பயிலும் மாணவியுமாவார்.

இவர் வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும் பரீட்சையில் நான்காம் தரம் வரை கர்நாடச இசையிலும் வயலின் வாசிப்பிலும் விசேட சித்தி பெற்றுள்ளார். இன்னும்தமிழ் திறன் உடற் பயிற்சி, கலை நிகழ்ச்சிகள் சம்பந்தமான பல போட்டிகளிற் கலந்து முதலாவது இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செய்தி மஞ்சரி

## மாநகரசபைக்கு இரு வாகனங்கள்

புனர்வாழ்வு அமைச்சிலிருந்து யாழ். மாநகர சபைக்கு இருவாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் இரு வாகனங்களும் மாநகர சபைக்குட்பட்ட பகுதிக்குள் சுகாதரம் மின்சாரம் வெளிசமூட்டல் போன்ற சேவைகளை மேற் பார்வை செய்வதற்கு பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7 கி)

## தரப்படுத்த ஒரு குழு

முதல்த் தடவையாக பரீட்சை வினாத்தாள்களையும் தயாரித்து தரப்படுத்துவதற்கென குழுவொன்றை நியமித்துள்ளது.

அரசாங்க நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், கல்வி உயர்கல்வி நிறுவனங்களில், கடமை புரிந்தவர்கள் அல்லது கடமை புரிபவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விண்ணப்பிக்க விரும்புவோர் பரீட்சை ஆணையாளர் பரீட்சைத் திணைக்களம். கொழும்பு-2 என்ற முகவரிக்கு இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர். (7 கி)

## தையல் பயிற்சி நிலையம்

அம்பாறை மாவட்டத்தின் தமிழ் மக்கள் வாழும் எல்லைக் கிராமமான வளதாப் பிட்டிப் பகுதியில் வாழும் படித்த வேலையற்ற யுவதிகளுக்கு வேலை வாய்புக்களை அளிக்கும் முகமாக தையல் பயிற்சி நிலையம் ஒன்றினை அமைக்கும் பொறுப்பினைச் சம்மாந்துறை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மேற்கொண்டுள்ளது. (7கி)

## ஆட்களைக்குறைக்க ஆலோசனை

திணைக்களங்களிலும், அமைச்சுக்களிலும் ஆட்களைக் குறைப்பதன் மூலம் சம்பள செலவுகளைக் குறைக்க அரசாங்கம் முயல்வதாக உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திணைக் களங்களில்பயன் படுத்தூப் படாது இருக்கும்காலி இடங்களை ரத்து செய்யும் படியும் நிதி அமைச்சு அறி த்துள்ளது.

1991 பட்ஜெட்டுடன் இவ்வாறு செய்யப் படும் புதியபதவிகளுக்கு நிதி ஒதுக்கீடு இருக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7 கி)

## நியமனம்வழங்ககோரிக்கை

சவூதிஅரேபியா, குவைத், அபுதபி, ஓமான்எகிப்து,ஈராக் போன்றநாடுகளில்இலங்கைதூதுவராலயங்களில்அரபு மொழி பெயர்ப் பாளர்களாக பணிபுரியும் வெளிநாட்டவர்களுக்குப் பதிலாக அந்த நாடுகளில் படித்துப் பட்டம்பெற்ற இலங்கையைச் சேர்ந்த சிறந்த அரபு மொழி பெயர்ப்பாளர்களை நியமிக்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சரிடம் கேட்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டதுடன் அந்நிய செலவாணியை மிகுதிப் படுத்தவும்இது வழிவகை செய்யும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.(7கி)

## யானை தாக்கிமூவர்மரணம்

காட்டு யானை அடித்து ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த தாய் உட்பட மூவர் பலியானார்கள்.

புதுக்குடியிருப்பு தேவிபுரம் 10 ஏக்கர் திட்டத்தில் இச் சம்பவம் இடம் பெற்றது.

விவசாயப் பண்ணைக்கு வரும் இரவு காட்டுயானையைத் துரத்த மரத்தின் கீழ் உறங்கிய வேளையில் மேற்படி சம்பவம் நடந்துள்ளது.

## மோசடிசெய்தால்தண்டனை

வெளி நாட்டு வேலைக்கு ஆட்களை அனுப்புவதில்மோசடி செய்பவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதமும் 5 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்படும்.

இதனை அமுல்படுத்தப்படுவதற்கான சட்டம் ஒன்றும் விரைவில் கொண்டுவரப்படவுள்ளது.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி போலி முகவர் நிலையங்கள் பல்வேறு மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. பொதுமக்களிடம் இருந்து பெரும் தொகை பணத்தையும் அறவிடுகின்றன.

இத்தகையமோசடிநடவடிக்கைகளில்ஈடுபடும்போலிமுகவர் நிலையங்களுக்குப் பொறுப்பானவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி அவர்களுக்கு மேற்படி தண்டனையை வழங்கும் முகமாகவே புதிய திருத்தச் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. (7கி)

## புதிய வகைத் திராட்சை

நாட்டின் சகல பகுதிகளிலும் பயிரிடகூடிய உயர்வர்க்க திராட்சை இனங்கள் நான்கு விரைவில் அறிமுகப்படுத்தப் படவுள்ளன.

இலங்கையில் சகல சுவாத்திய நிலைகளிலும் விளையக் கூடிய இவ்வின திராட்சைகள் வீட்டுத் தோட்டங்களிலும், வர்த்தக நோக்கிலும் செய்கை பண்ணக் கூடிய தென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக விளைச்சலும் லாபமும் ஈட்டக் கூடிய இவ்வின திராட்சைக் கன்றுகள் விரைவில் பயிர் செய்கை யாளர்களுக்கு விநியோகிப் பதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டுவருகின்றன. (7 கி)

யாழ். கிளி. மாவட்ட வைத்தியசாலைகளில்

# டாக்டர்களுக்கு பற்றாக்குறை; வைத்தியசேவை பெரும் பாதிப்பு

யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ள வைத்தியசாலைகளில் டாக்டர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கீழ், யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் மொத்தம் ஐம்பத்தைந்து ஆஸ்பத்திரிகள் உள்ளன.

இதிற் பதினெட்டு வைத்தியசாலைகளுக்கு ஒவ்வொருவர் வீதமாகப் பதினெட்டு டாக்டர்கள் அவசியம்தேவைப் படுகின்றனர்.

மற்றைய வைத்தியசாலைகளை உதவி வைத்திய அதிகாரிகளைக் கொண்டு இயக்க முடியாதெனவும் இருக்கவேண்டிய பதினெட்டு டாக்டர்களில் தற்பொழுது பதினொரு டாக்டர்கள் மட்டுமே உள்ளனர் எனவுந் தெரிவிக்கப்பட்டது,

இதனால் பல நோயாளர்கள் சிரமத்திற்கு உள்ளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4,75கி)

## இன்று காங்கேசனில்

(காங்கேசன்துறை,

அண்மையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட காங்கேசன்துறை ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலயத்தில் இன்று மண்டலாபிஷேகப் பூர்த்தியும் சங்காபிஷேகமும் நடைபெறுகின்றது.

சிவஸ்ரீ. ஐ. வைத்தியநாதக் குருக்களால் சங்காபிஷேகக் கிரியைகள் நடாத்தப்படும். இரவு விசேஷகலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் என ஆலயபரிபாலன சபை அறிவித்துளளது. (ப-10 கி)

## கட்டுடைக் கிளையில் ரூ. 16 ஆயிரம் பொருள் திருட்டு

(மானிப்பாய்)

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின்கட்டுடை கிளை உடைக்கப்பட்டு சுமார் 16.000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும், புடவை வகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சீனி, மா, அரிசி என்பனவும் கொள்ளையிடப்பட்ட பொருட்களில் அடங்கும்.

இச் சங்கத்திற்கு பக்கத்தில் உள்ள கட்டுடை உப—அஞ்சலகமும் உடைக்கப்பட்டுள்ளது. எனினும் இங்கு பணமோ முத்திரைகளோஇல்லாததால் எதுவிதப் பொருட்களும் திருடப்படவில்லை,

இது சம்பந்தமாக விடுதலைப்புலிகளிடம் முறையிடப்பட்டுள்ளது. (30 ஸ்ரீ)

## ஸ்ரீலங்கா ரூபவாஹினியும் 'சின்னத்தனமான' நையாண்டி!

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் இந்நாட்டு பௌத்த, இஸ்லாமிய மக்களை நையாண்டி செய்யும் வகையிற் சில நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றது.

இவ்வாறு மத்திய மாகாண சபையிற் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் பல பாத்திரங்களைப் படைத்து இந்நாட்டு மக்களை இழிவுபடுத்துகின்றது.

அண்மையில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியின் போது இந்துக்கோயில் அர்ச்சகர் ஒருவரின் வழிபாட்டுக் கிரியைகளையும், கிராமச் சிங்களநபர் ஒருவரின் இயல்பையும், முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் செயற்பாட்டையும் இழிவான முறையில் ரூபவாஹினி சித்திரித்துள்ளது.

இவ்வாறு சமூகப் பழக்க வழக்கங்களை வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பாகக் காட்டுவதை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உடனடியாக நிறுத்த வேண்டும். இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது. (7.கி)

## இராமநாதன் பவள விழா

(உடுவில்)

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியின் 75 வது ஆண்டு நிறைவினையொட்டிப் பவள விழா இன்று ஆரம்பமாகவுள்ளது. இதனை முன்னிட்டு 15, 16, 17, -ந் திகதிகளில் கல்லூரியில் மாபெரும் கலைவிழாக்களும் விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன. அத்துடன் மலர் வெளியீடும் நடைபெறும். (ப-2கி)

## வைரவர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மத்திய பஸ் நிலைய ஸ்ரீ ஞான வைரவ சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் இம் மாதம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

## தபால்சேவை ஸ்தம்பிதநிலை

ரயில் சேவை பாதிப்படைந்ததையடுத்து வடபகுதிக்கான தபால் சேவையும் ஸ்தம்பித நிலையடைந்துள்ளது. எனினும் உள்ளூர் தபால் சேவைகள் வழமைபோல் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (03)

## சைக்கிள் களவு

சங்கானைச் சந்தைப்பகுதியில் சைக்கிள் களவுகள் அதிகரித்துள்ளதுகடந்தவாரம் மட்டுமே பத்துக்கு மேற்பட்டசைக்கிள்கள் சந்தையில் வைத்து பொது மக்கள் பறிகொடுத்துள்ளனர். (30-72)

## சுவையான செய்திகள்

### கல்லூரியில் கழுதை

அலெக்ஸாந்திரியா பல்கலைக் கழகத்தின் புகழ்மிக்க கிரேக்க இலக்கணப் பேராசிரியர் அமோனியஸ் டிராமாடிகஸ் என்பவர் இவர். தினமும் கழுதை மீது ஏறித்தான் இவர் கல்லூரிக்குச் செல்வார். அவர் வகுப்பில் பாடம் நடத்தும்போது இந்தக் கழுதையும் மாணவர்களுடன் அமர்ந்து பாடம் கேட்குமாம். (76 கி)

★

### ஒற்றுமைத் திலகங்கள்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே விபத்தில் அடிபடுவது, அதை ஒட்டிச் சிகிச்சை பெறுவது இவை எல்லாம் அடிக்கடி நடப்பவைதான். ஆனால் தெற்கு இங்கிலாந்தைச் சேர்ந்த சஸ்ஸெக்ஸ் பகுதியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கணவன், மனைவி, பிள்ளை ஆகியோர் வெவ்வேறு விபத்தில் ஒரே வாரத்தில் மாட்டிக் கொண்டார்கள். என்ன அதிசயம்? மூன்று பேர்களுக்குமே விபத்து வலது காலில் ஏற்பட்டுகாலில் கட்டுப் போட்டுக் கொண்டுஊன்றுகோலுடன் உலாவி வருகிறார்கள். ஒற்றுமைத் திலகங்கள் (76கி)

★

### பிரமச்சாரிகளுக்கு வரி

மணம் செய்து கொள்ளாமல் பிரமச்சாரியாக இருந்தால் வரி போடும் நாடு ஒன்று இருக்கின்றது. பல வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டில் போர் நிதி சேர்க்க மூன்றாம் வில்லியம் மன்னர் பச்சுலர் டக்ஸ் வரி போட்டார். இந்தவரி 1695 ஆம் ஆண்டில் இருந்து 1706 ஆம் வருடம் வரை வசூல் செய்யப்பட்டது. இரண்டு வருடங்களுக்கு முன்பு கனடாவில் உள்ள ஒன்டாரியோ நகரில் பக்சுலர் டக்ஸ் கல்யாணமாகதவர்களிடம் மாதம் சுமார் 70 ரூபாய் வசூல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். (79கி)

## தமிழ்த்தினவிழா ஒத்திவைப்பு

(கொழும்பு)

இன்றும், நாளையும் கொழும்பில் நடைபெறவிருந்த தமிழ்த்தின விழா போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்குக்கிழக்கு பகுதிகளில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை காரணமாக போக்குவரத்து சேவைகள் சீர்குலைந்ததையடுத்தே மேற்படி போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

## மீண்டும் கைப்பற்ற முயற்சி

விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட பொலிஸ நிலையங்களை மீண்டும் கைப்பற்றுவதற்கு ஆயுதப் படையிருனக்கு போதுமான அளவு சாதனங்கள் அனுப்பப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### தபால் பொதிகள் வீதியில்; பயணிகள் போடிநடையில்

முரசொலி
ஆசிரியர்

கொழும்பில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் மடுவுக்கு வரும் தபால்பைகள் இரவுமன்னார் தபால் புகையிரதமூலம் வந்து மடுவீதியில் பகல் முழுதும் உறங்குகிறது.

இப்பைகளை எடுத்துவரச் செல்ல வேண்டிய பஸ் இரவில் பாலப்பிட்டியில் நித்திரை கொள்கிறது. காரணம் கேட்டால் பஸ்சுக்கு லைற்று இல்லை, மடுவீதி செல்ல முடியாது என்கிறார்கள்.

பின்பு பி.ப 6.00 மணியளவில் இந்தத்தபால் பைகள் மடு தேவாலய தபாற்கந்தோருக்கு வந்து சேருகின்றது.

இதேவேளை தென்பகுதியில் இருந்து வரும் மடு யாத்திரிகர்களும் இந்தப்புகையிரத இணைப்புச் சேவை பஸ் மடுவுக்கு இல்லாததால் பொடி நடையில் வரிசையில் மடுப்பகுதியை வந்து அடைகிறார்கள். இது கடந்த சில நாட்களாக நடைபெறுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்கக் கூடாதா?

மடு, எஸ் நிக்சன்

### மருந்தில்லை! உணவில்லை: மயிலிட்டிவைத்தியசாலைநிலைஇது

ஆசிரியர்
முரசொலி

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கென இருக்கும் ஒரே ஒரு மார்பு சிகிச்சை நிலையம் மயிலிட்டியில் உள்ளது.

இவ்வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளருக்கு அதிமுக்கியமாக தேவைப்படும் Rifapicin pirazimamisde inah ஆகிய மருந்து வகைகள் இல்லை. முதலாவது மருந்து சென்ற சித்திரை மாதம் இருந்தும் மற்றைய மருந்து இடையிடையே இல்லாமலும் போய் விடுகின்றது. வெளியே வேண்டி பாவிக்கும் படி வற்புறுத்தப் படுகின்றனர். காச நோயாளிகள் அதுவும் வாட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்கள்எல்லோரும் பணக்காரர்கள் அல்ல! ஏழைகளைத் தான் இந் நோய் வாட்டி வதைக்கிறது. அவர்களால் தினசரி 13 ரூபா முதல் 15 ரூபா வரை செலவு செய்ய முடியுமா?

நோயாளருக்கு தேவையானது அடுத்ததாக தண்ணீர். காலை எழுந்ததும் காலைக் கடனை முடித்து கை கால் முகம் கழுவி மருந்துண்ணவும்மதியத்தில் உடைகளை கழுவி குளிப்பதற்கும் மாலை முகம் கழுவுவதற்கும் இரவு நேரங்களில் அவசர தேவைகளுக்கும் தண்ணீர் அதிக முக்கியம்.இது தேவைகளுக்கு தக்கபடி இல்லை.

தண்ணீர் விநியோகத்திற்கென ஊழியர் ஒருவர் இருந்தும் குறிப்பிட்ட நேரம் மட்டும் தண்ணீர் என அடம் பிடிக்கின்றார்.

இங்கு தரப்படும் மருந்துகளுக்கேற்ப உணவும் இருந்தால் நல்லது. தினசரி இருநேரமும் கீரைக்கறி மற்றையவை புடலங்காய், பூசினிக்காய் மரவள்ளிக்கிழங்கு வாழைக்காய் போன்றவைகளினால் செய்யப்படும் குழம்பு என்ற பெயரில் சொதியைக் காண்கின்றோம். இறைச்சி என்ற பெயரில் 3 அல்லது 4 துண்டுகள்(5 கிராம்)கூட இருக்காது. ஒரு முறை போடப்படும் ஒரு அகப்பை சோறு ஒரு நோயாளிக்கு போதுமா?

8-ம் வாட்டில் உள்ள 4 கழிவறைகளில் இரண்டு நிரம்பி விட்டன. மற்றைய இரண்டும் இன்றோ நாளையோ என்றிருக்கிறது. காலையில் வரும் சிற்றூளியர்கள் தண்ணீர் இல்லாத காரணமாக கழிவறை குளியல்அறை அதனுடனொத்த வாய்க்கால்கள் கழுவப் படமால் துர் நாற்றும் வீசுகின்றது.

பெரும்பாலான நோயாளர்கடற்கரையை மலசல கூடமாக பாவிக்கின்றார்கள். கடற்கரை இதன்மூலமாக அசுத்தமடைகின்றது. தண்ணீர் தாராளமாக இருந்தால் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

மேலே குறிப்பிட்ட நான்கு விடயங்களும் நோயாளர்களுக்கு அத்தியாவசியமானது. தயவு செய்து இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மயிலிட்டி. (இக்கடிதத்தில் 60 பேர் ஒப்பமிட்டுள்ளனர்)

கிளி.விவசாயபீடக் காணியில்

## அத்துமீறிக் குடியிருந்தவர்களுக்கு புதிய காணிகள் வழங்கப்பட்டன

(உருத்திரபுரம்)

யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்திக்கென கிளிநொச்சியில் ஒதுக்கப்பட்ட 60 ஏக்கர் காணியில்அத்து மீறிக் குடியிருந்த 24 குடியிருப்பாளர்களுக்கு புதிய குடியிருப்புக்காணிகள் வழங்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்துக்கு கிளிநொச்சியில் ஒதுக்கப்பட்ட காணியில் இவர்கள் பலவருடகாலமாக அத்துமீறி குடியிருந்து வந்தார்கள். இதனால் கட்டிட வேலைகள் பாதிக்கப்பட்டு வந்தன.

குடியிருப்புக் காணிகளும் ,நஷ்ட ஈடும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரால் மாவட்ட செயலகத்தில் கடந்த 11-ம் திகதி வழங்கப்பட்டது.

இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி அரசியல் இணைப்பாளர் எம்.ஜி.சிவபாதம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ப-6கி)

வியாழன் மாற்றம் உங்களுக்குஎப்படி

# விண்ணிலே குரு மாற்றம் மண்ணிலே மனித மாற்றம்

யாழ். சோதிடர் ச. அரியநாயகம்

**மகரம்:** உத்தராடம்2, 3-4, திருவோணம், அவிட்டம் 1-2 இவர்களுக்கு இதுவரை இருந்து வந்த கஷ்ட நஷ்டங்கள் நீங்கி சுகவாழ்க்கையும், லெட்சுமி கடாட்சமும் பெறுவர். ஆகவே இவர்கள் எவ்விஷயங்களையும் துணிச்சலாகச் செய்யவும். அதில் வெற்றியும் காண்பர். பொதுவாக இவர்களுக்கு தொழில் விருத்தி, பணப்புழக்கம், புத்திரசுகம், மனை மூலம் வசதி, வெளியூர்ப் பிரயாண சுகம், உடன் பிறந்தோரால் நன்மை, வாகன சுகம், ஆடையாபரணச் சேர்க்கை, மனையில் சுபகாரியம் நடத்தல், மனைவி வழி சுகங்களையனுபவிக்க இவர்களுக்கு லெட்சுமி கடாட்சம் உண்டாம். ஆகவே இவர்கள் பல துறைகளிலும் முன்னோடியாய் விளங்கவும் அரசியல் அனுபவமுள்ளவர்கள் திடீர் முன்னேற்றமும் வணிகர்கள் கடல் தொழில், இயந்திரத் தொழில், வாகனத் தொழில், வைத்தியம், சோதிடம் சிற்பசாரித் தொழில் செய்வோர் மிகுந்த இலாபமடையவும் திடீரென வெளியூர் போய்வரவும். இராஜ மரியாதையும் உயர் பதவி, பெரும் பொருளாதாரம், அழகான மனை, பூமி சேரவும், அன்னியருதவிகளைப் பெறவும், களஸ்திர வழி சுகங்களையனுபவிக்கவும் இதுவரையனுபவிக்காத சுகங்களை இவர்கள் அனுபவிக்கவும் புண்ணிய வழிபாடு மூலம் சுகங்களை அனுபவிக்கவும் பலன் உண்டாம் இவர்கள் சனீஸ்வர வழிபாடு செய்ய நற்சுகஜீவிகளாவர்.

**கும்பம் :** அவிட்டம் 3 — 4 சதையம், பூரட்டாதி 3ஆய பாதம்-இவர்களுக்கு இதுவரை இரண்டு பதினொராதிபதியா யுள்ளகுருபகவான் 6ஆம்இடமான சத்துரு ஸ்தானத்தில் வருதால் இவர்களுக்கு இதுவரையும் இருந்து வந்த யோகப் பலன்களை இவர்கள் சமபலயோகமாகவே கருதவேண்டும். இவர்களுக்குச் சனி பகவான் ஏழரைச் சனியாய்ப் பார்ப்பதால் வீண் செலவு, இனப் பகை, இட மாற்றம், குடும்பக் கஷ்டம், இராஜ பயம், மனக் கிலேசம், காதரரிடையே மன விரிசல், அரச தொழில் பார்ப்போர் அவஸ்தைப்படவும் இயந்திரத் தொழில் மூலம் சமபலனும் அடைவர். ஆகவே இவர்கள் வெளிநாட்டுத் தொடர்பான தொழில் மூலம் முன்னேற்றமடையவும் அந்நாடுகளில் தொழில் பார்க்கவும் அந்நியருதவிகளை அனுபவிக்கவும் புதுத் தொழில் சினேகிதர் மூலம் உதவி பெரியோராசி புண்ணிய வழிபாடு கல்வியால் தடையிருப்பினும் 10—10—1990 ன் பின் இவர்கள் சகல வித காரியங்களிலும் முன்னேற்மடையவும் பெரியோராசியும் உயர் பதவிகளை அனுபவிக்கவும் வாக்கு வசிகரமும் வணிகர்ள், கடற் தொழில், இயந்திரத் தொழில், வைத்தியம், சோதிடம் ஆகிய தொழில் செய்வோர் நல்ல பலன்களை அனுபவிக்கவும் வெளிநாட்டு பிரயாண சுகமும் லெட்சுமி கடாட்சமும் பெற்று வாழ இவர்களுக்கு குருவருள் உண்டாயினும் இவர்களுக்கு முழங்கால் வாதம், குடல்ரோகம் இருதயவருத்தம் உள்ளோர் சகல விதத்திலும் கவனம் எடுக்கவும் இவர்கள் சனீஸ்வர பிரமா வழிபாடு செய்ய இவர்களுக்கு திடீர் அதிஷ்டம் கிடைக்கப் பலன் உண்டு.

**மீனம்:** பூரட்டாதி4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி இவர்களுக்கு 1—10க்குடைய வியாழன் 5ஆம் இடமான யோகஸ்தானம் வருவதால் சகல விதங்களிலும் முன்னோடியாகத் திகழவும் பெரியோராசியும் புகளாரமும் உயர் பதவியும் லெட்சுமி கடாட்சமும் மனை பூமியால் நன்மையும் விவாக நிட்சயமும் ருது சோபனமும் தனதானிய வரவும் இராஜ யோகமும் உல்லாச வாழ்க்கையும் உடன் பிறந்தோரால் நன்மையும் மாமன் வழி உதவியும் பண வரவும், வாகனச் சேர்க்கையும் தொழில் பேறும் வெளியூர் தொடர்புகளும் அதன் மூலம் சுகங்களை அனுபவிக்கவும் திடீர் பிரயாண வசதியும் வாக்கு சாதுரியமும் வணிகர்கள் கடல் தொழில், இயந்திர தொழில், வைத்தியம், சோதிடம் ஆபரண தொழில் புரிவோர் அதிக இலாபமடையவும் மகப்பேறில்லாதோர் நிவர்த்திகாணவும் கல்வியால் தொழிலும் கல்வி பயிலுவோர் சித்தியடையவும், விவாகத் தடையுடையோர் நிவர்த்தி பெறவும் ஆலைய வழிபாடும் அந்நியருதவியும் வாக்குவல்லமையும் இலட்சுமி கடாட்சமும் தீர்க்காயுளும் உண்டாயினும் இவர்களுக்கு சனி திருஷ்டி இருப்பதால் மேற்குக் கிழக்குக் திசையில் சினேகிதம் கொடுக்கல் வாங்கல், சினேகித உறவு வைப்பது மிகக் கண்ணியமாக இருத்தல் வேண்டும். திடீர் நம்பிக்கை மோசடி நேத்திரரோக பீடை, இரத்தக் கொதிப்பு சலரோக பீடை ஆகியன இளர்களையணுக பலன் இருப்பதால் இவ்விஷயங்களில் மிகுந்த சிரத்தை எடுக்கவும்.

# பாகிஸ்தான் திரையரங்குகளில் ருஸ்டியின் 'வாழ்க்கை வரலாறு'

சர்ச்சைக்குரிய ''சாத்தானின் வசனங்கள்'' என்ற புத்தகத்தை எழுதிய ஆசிரியர் சல்மன்ருஸ்டியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் திரைப்படம் பாகிஸ்தானில் சுமார் 65 திரையரங்குகளிற் கடந்த ஏப்பிரல் மாதம் முதல் காண்பிக்கப்படுகிறது.

3 மணிநேர திரைப்படத்தில் அவரைக் கொலை செய்வதாக சித்தரிப்பதன் மூலம் அவர் மீதுள்ள ஆத்திரத்தை தீர்ப்பதாக இஸ்லாமியர்கள் கருதுகிறர்கள்.

மறைந்த ஈரானியதலைவர் அயதுல்லா கொமெயினி ருஷடிக்கு மரணதண்டனை விதித்திருந்தார். இவரின் உறவினர்கள் பாகிஸதானில் ஒரு காலத்தில் வசித்து வந்தார்கள். திரைப்படத்தில் திரு. ருஸடியின் பாத்திரத்தை அவரது சாயலையுடையவரும் பிரபல தொலைக்காட்சி நடிகருமான அப்துல் அகமட் ஏற்றுள்ளார்.

குடியரசுத் தலைவர்கள்-கொர்பச்சேவ் சந்திப்பை அடுத்து

# பால்டிக்குடியரசு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்படும் அறிகுறி

பால்டிக் குடியரசுகளின் தலைவர்கள் சோவியத் யூனியனின் ஜனாதிபதி கொர்பச்சேவ் உடன் இணக்கம்காணும் கட்டத்தை அடைந்துள்ளனர் என அறிவிக்கப் படுகின்றது.

இதன் காரணமாக மூன்று பால்டிக் குடியரசுகளும் சுதந்திரம் பெறுவதற்காகக்கூட்டாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டைகள் நீங்கி விடும்அறிகுறிகள் தென்படுகின்றன.

கொர்பச்சேவ் நடாத்திய பேச்சுக்களில் ஓரளவு முன்னேற்றம் இருப்பதாகச்சர்ச்சைக் குரிய மூன்று பால்டிக் குடியரசுகளான லித்துவேனியா, வட்டியா, எஸ்தோனியா என்பனவற்றின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி கொர்பச்சேவுடன் பங்கு கொள்ளும் மகாநாட்டில் பங்குபற்ற இம் மூன்று பால்டிக் குடியரசுகளின் தலைவர்களும் மாஸ்கோ சென்றுள்ளனர்.

குடியரசுகளுக்கு மேலும் சுதந்திரம் வழங்கி புதிய யூனியனை உருவாக்க வேண்டும் என பெரும்பாலான குடியரசுகளின் தலைவர்கள் கோரி வருகின்றனர். ஒவ்வொரு குடியரசும் சோவியத் மத்திய அரசுடன் விசேட உறவை வைத்திருக்க கூடிய விதத்தில் சோவியத் யூனியனை ஒரு சம்மேளனமாக மாற்றலாம் என ஜனாதிபதி கொர்பச்சேவ் தெரிவித்துள்ளார்.

இதே வேளை சோவியத் தலைவர் கொர்பச்சேவ் மூன்று பால்டிக் குடியரசுகளின் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த இருப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

1940 ஆம் ஆண்டு இம் மூன்று பால்டிக் குடியரசுகளையும் சோவியத் யூனியன் தன்னுடன் இணைத்துக் கொண்டதை அமெரிக்காஅங்கீகரிக்க வில்லை என்டதை ஜனாதிபதி புஷ் நினைவு படுத்தினார்.

இதேவேளை பால்டிக் குடியரசுகளுடனான பிணக்குகளுக்குத்தீர்வு காணும் வரை சோவியத் யூனியனுடனான வர்த்தக உடன்படிக்கைகளை அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரிக்க மாட்டாது என அமெரிக்கவெளிவிவகார அமைச்சர் ஜேம்ஸ்பேக்கர் தெரிவித்தார்.

சோவியத் யூனியனில் இருந்து யூதர்கள் வெளியேறுவதை தடுப்பது என்ற மொஸ்கோவின் தீர்மானம் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார். (9கி)

## வலிகாமம்வடக்கு சிற்றூரவை

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் வலிகாமம் வடச்குப் பிரதேசத்திற்கான சிற்றூர்அவைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

வலிகாமப் பகுதி பொறுப்பாளர் ஆஞ்சநேயர் இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்தார். இக்கூட்டத்தில் 10 பேர் கொண்ட வட்ட அவை தெரிவானது. (ப-10 கி)

## தூங்காது விழிக்கும்.-

அப்பொழுது மூளை நன்றாக ஒய்வு கொண்டதால் சுறுசுறுப்பாக வேலை செய்யும். நல்ல ஞாபக சக்தி இயல்பாக உண்டாகும்.

### தூக்க மாத்திரைகள்

'ஒரு மனிதன் நித்திரை செய்யும் விதத்தில் அவனுடைய ஆரோக்கியமும், நீண்ட ஆயுளும், நோயற்ற வாழ்வும் அடங்கி இருக்கிறது' என்று பல மருத்துவ மேதைகள் கூறுகின்றார்கள். நித்திரை என்றதும் நாம் குறிப்பிடுவது, மிக இயல்பான தூக்கத்தைத்தான் குறிப்பிடுகின்றோம். செயற்கையான தூக்க மாத்திரைகளை உட்கொண்டு அவற்றிற்கு அடிமையாகி உயிரையும் இழக்க வேண்டாம். தூக்க மாத்திரைகள் எப்பொழுதும் அபாயத்தை விளைவிக்கும்

### நித்திரை இறைவனின் படைப்பு

கடவுள் இரவைப் படைப்பதற்குக் காரணமே, மக்கள் நிம்மதியாகத் தூங்கி, மறுநாளில் புத்துணர்வுடனே தங்கள் வேலைகளைச் செய்வதற்காகவே. நமது மூளைக்கு, நரம்புகளுக்கு ஓய்வு தேவை என்று, அவர் அறிவார்

இயற்கைக்கு மாறாக, எவன் ஒருவன் இரவு நேரங்களிற் தூங்காமல் வேலை செய்கிறானோ, அவன் உடலில் நோய்கள் மிகும்.

உதாரணமாக மலச்சிக்கல் வரும் மலம் சரியாகக் கழியாததால் மூலம், பவுத்திரம், பூச்சிகள் போன்ற நோய்களும் அதிகமாக வழிஉண்டு.

இரவில் தூங்காமல் வேலை செய்கின்ற லாரி டிரைவர்கள் தையற்காரர்கள், மில்லில் வேலை செய்கின்றவர்கள், இவர்களின் உடலைப் பரிசோதிக்கும் பொழுது, நித்திரை சரியாக இல்லாததினால்அவர்களுக்கு வரும் வியாதிகளின் விளைவாக, அவர்கள் படும் தெல்லை, சொல்லத் தரமன்று என்று அறிகிறோம்.

### ஐஸ்வரியாவான்கள் படும் பாடு

நித்திரை...! நித்திரை !! ஓ! எங்களுக்கு நித்திரையே வருவதே இல்லை என்று, பணக்காரர்கள் ஓலமிடுகிறார்கள். ஒரு விறகு வெட்டும் தொழிலாளி, மூட்டை தூக்கும் தொழிலாளி, இரவில் படுத்தால் ஆனந்தமாகத் தூங்குகிறார்கள். பணக்காரர்கள் தூங்குவதில்லை. தூங்குவது போலவே விழித்துக் கொண்டிருப்பார்கள். ஏழைக்குப் பணம் இல்லை. பணக்காரன் திருடனுக்கு பயந்து, பணத்திற்கு பாதுகாப்பு அளிக்க, உறங்குவதே இல்லை. ஏழைக்குஉடல்உழைப்புஉண்டு பணக்காரனுக்கு உடல் உழைப்பு இல்லை. உடல் உழைப்பு இருந்தால் தான், நன்றாகத் தூங்கமுடியும். உடல் உழைப்பு இல்லாதவர்கள் தினமும் உடற் பயிற்சிகளைச் சிறிது நேரமாவதுசெய்யுங்கள். அப்பொழுது நித்திரை நன்றாக வரும். நீந்துதல், ஓட்டம் ஓடுதல்.. நடப்பது.. முதலிய பயிற்சிகள் நல்லவை.

அதிகமாக தூங்கினாலும், மனிதர்கள் சோம்பேறிகளாகி விடுவார்கள். அளவு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும். இரவில் முன்னேரத்தில் படுக்க போக வேண்டும். விடியற் காலையில் முன்னேரத்தில் நான்கு மணிமுதல் ஐந்து மணிக்குள்ளாக எழுந்து விடலாம். உடல் உழைப்பு செய்தவர்கள், பின்னும் ஒரு மணி நேரம் தூங்கலாம்.

### இரவு உணவு

தூக்கம் வருவதற்கு முன்னர் இரவு உணவை அளவாக அருந்த வேண்டும். சீரணமாகாத, கடினமான இறைச்சி, கடினமான உணவுவகைகள் போன்றவற்றை இரவில் சாப்பிடாமல் இருப்பது மிகவும் நல்லது. பால், பழம் சாப்பிடுவது நல்லது. காற்றோட்டமாக இருக்கும் இடத்தில் படுக்க வேண்டும். இன்றைய நாகரீக வாழ்வில் ரப்பர் மெத்தை தலையணை போன்ற பொருள்கள் சிலருக்கு ஒத்துக்கொள்ளளாமல் அலெர்ஜியை (ஒவ்வாமையை) உண்டாக்குகின்றன. பாய், ஜமுக்காளம், இலவம் பஞ்சால் தயாரித்த மெத்தை தலையணை ஆகியவற்றை உபயோகிப்பது தான் நல்லது. ரப்பர் உஷ்ணமுண்டாக்கும் இலவம் பஞ்சு உஷ்ணத்தைத் தணிக்கும்.

### நோய்க்கு மூல காரணம் நித்திரையின்மை

நோய் உண்டாவதற்கு, மூல காரணமே, தூக்கமின்மை தான். நோயாளி நன்றாகத் தூங்குவதற்கு நிகரான வேறு மருந்து இல்லை. மலம் தினமும் கழிய வேண்டும். மலச்சிக்கல் இருப்பது கூடாது. பகலில் தூங்குவது, கெட்ட பழக்கம். பகலில் தூங்குவதால், சோம்பேறித்தனம் அதிகரித்து உடலில் எடை கூட வழியுண்டு. வயது முதிர்ந்தவர்களுக்குத் தூக்கம் இயற்கையாகவே, நாள் ஆக ஆகக் குறையும். இது முதிர் வயதின் இயல்பு.

ஒரு மனிதனுக்கு உணவு எத்துணை முக்கியமோ, அந்த அளவிற்கு தூக்கம் மிக மிக முக்கியமானது. நரம்புக் கோளாறுகள் உள்ளவர்களுக்குத், தூக்கம் இல்லாமையால் கனவுகள் அடிக்கடி வருகின்றன.

### மதுவையும் சிகரெட்டையும் ஒழிகக வேண்டும்

மதுபானம், சிகரெட், ஜீரணிக்க முடியாத மாமிச அல்லது பிற உணவு வகைகளை உண்டு விட்டு இரவில் தூக்கம் இல்லையே என்று, அவதிப்படுவது நல்லதல்ல.

### தீய எண்ணங்கள் கவலை

பணம் பணம்... திருடன்... திருடன்! நாளைக்குக் கடனைக் கட்ட வேண்டுமே.. நாளைக் காலையில் நம் விரோதியைக் கண்டு, அவனை அடிக்க வேண்டுமே ! நாளைக்கு அவன் சொத்தை எப்படியாவது அபகரிக்க வேண்டுமே ! என்று உணர்ச்சிவசப்பட்டு, மனதையும், மூளையையும் போட்டு அலட்டிக் கொள்ளுகிறவர்களுக்கு எவ்வாறு தூக்கம் வரும்...?

### முடிவுரை

இத்தகைய தீய சிந்தனைகளையும் கவலைகளையும் மனதினின்று அகற்றுவது நல்லது. இல்லையேல் இரத்த அழுத்த நோய் வரும். படுக்கைக்குப் போகும் பொழுது சிறுநீர் கழித்து விட்டுக்: கை கால்களைக்கழுவி, மன அமைதியுடன் கடவுளை நினைத்து கவலைகளை அவர் பேரில் வைத்து: ஏற்ற நல்ல நித்திரை கொளள வேண்டும்.

தூக்கம் இல்லையேல் இறுதியில் துக்கம் தான்! எனவே நன்றாகத் துயில் கொள்ள அறிவீர்! அப்பொழுது தவறாமல் உங்கள் உடல் நலம் பெருகும்! இரவு வேளையில் இந்தக் கட்டுரையை எழுதி முடித்த மாத்திரத்தில், எனக்கு நல்ல தூக்கம் வந்து விட்டது! நண்பர்களே, நள்ளிரவு.

(நன்றி—NALVALI)

## தொலைபேசி, போக்குவரத்து வசதிகளைத் துண்டித்து

# சாதிக்க கூடியது எதுவுமில்லைஎன ஈரோஸ்

# எம்.பி பாராளுமன்றத்தில் கண்டன உரை

''கிழக்கில் ஏற்பட்ட சில அசம்பாவிதங்களினால் வடக்குக் கிழக்கு மாகாணத்துக்கான சகல தொலை தொடர்பு சேவைகளும் துண்டிக்கப்பட்டுவிட்டன. போக்குவரத்துச் சேவைகளுக்கும் இதே நிலைதான் இதே போன்ற அவசர நடவடிக்கைகளினால் எதையும் சாதித்து விடமுடியாது.'

இவ்வாறு ஈரோஸ் எம்.பி திரு.செபஸ்தியான்பிள்ளை எட்வேட் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''தமிழ்ப்பேசும் மக்கள்கடந்த 40 வருடங்களாக பல இன்னல்களைச் சந்தித்துள்ளனர் இவர்கள் தாமும் இந்நாட்டில் தன்மானத்துடன் வாழ வேண்டுமென்ற நோக்குடன் காலத்திற்குக் காலம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். பல இனக்கலவரங்களைச் சந்தித்துள்ளனர்.

பாதுகாப்பின்மையைப் பெரிதும் உணர்ந்திருந்தனர். தமிழ்மொழி அந்தஸ்து பற்றியும் அரசியல் யாப்பில் அது சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்றும் பல வகையில் முயற்சி செய்தும் தோல்வி கண்டனர். ஆட்சிக்கு வந்த பல அரசுகளுடனும் ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர்,ஈற்றில் ஏமாற்றமடைந்தனர்.

குடியரசு யாப்பிலும் அடிப்படை உணர்வுகளோ அபிலாஷைகளோ உள்ளடக்கப்படவில்லை என்பதால் சில முடிவுகளை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்றும் சொன்னார்.

(ஸ்ரீ)

### வடமராட்சி கடல் பிராந்தியத்தில்

# மீனவர் மீது கடற்படை சூடு பீதியால் மக்கள் குடிபெயர்வு

வடமராட்சிக் கடற்கரைப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் அட்டகாசத்தால் மீனவர்கள் பெரும் கலக்கம் கொண்டிருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

புதன்கிழமை இரவு மேற்படி கடல் பிராந்தியத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் எதிரொலியாக இக் கடற்கரையோரப் பகுதி மக்கள் அச்சத்தால் தம் இருப்பிடங்களை விட்டுக் குடி பெயர்ந்தனர்.

கடற் படையினர் மீனவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் மீனவரின் சில படகுகளையும் கைப்பற்றியதாகவும் சொல்லப்படுகிறது.

மீனவர்க்கான சேத விவரங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. (34 ஸ்ரீ)

# பேச்சுககளையே விரும்புகிறோம் இரத்தக் களரியை அல்ல

''மோதல்களையோ, இரத்தக் களரியையோ நாம் விரும்பவில்லை. தற்போது நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறுவதையே விரும்புகிறோம்'' என்று நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்பான செய்தியாளர் மாநாட்டில் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட பொலிஸ் நிலையங்கள்மீளஒப்படைக்கப் படாவிட்டால் அவை பலாத்காரமாகவே மீளப்பெற வழி செய்யப்படும் எனக்குறிப்பிட்ட அமைச்சர் ஜனாதிபதி பிரேமதாஸ இரத்தக்களரி ஏற்படுவதை விரும்பவில்லை.யுத்தங்கள் பேச்சுகள் மூலமே தீர்க்கப்படுகின்றன என்றார்.

தற்போதைய நிலையிலும் விடுதலைப் புலிகளுடன் பேச அரசு தயாராக இருக்கின்றது,

விடுதலைப்புலிகளை அரசாங்கம் 'இப்போதும் விரோதிகளாக கருதவில்லை என அமைச்சர் ரஞ்சன் குறிப்பிட்டார்.

## காலமானார்

### செல்வி

### புஷ்பரஞ்சனி பொன்னுத்துரை

செல்வி புஷ்பரஞ்சனி 14-06-90 ல் காலமானார், இவர் சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொன்னுத்துரை, திருமதி பரமேஸ்வரி பொன்னுத்துரை ஆகியோரின் அன்புமகளும், பொ. சதானந்தம் (நிருத் ஏஜன்சி சாவகச்சேரி), பொ. அருளானந்தம் லெப்ரினன்ட் கொமான்டர் - இலங்கைக் கடற்படை), பொ. விவேகானந்தம் (மின்சார ஒப்பந்தகாரர்), திருமதி சி. புஷபரத்தினம், திருமதி லோ. புஷ்பராதா, காலஞ்சென்ற பொ. பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சி. சிவராஜா (மார்க்கட் சாவகச்சேரி), சி. லோகநாதன் (நெல் சந்தைப்படுத்தும் சபை, பதுளை), சதானந்தம் செல்வராணி, அருளானந்தம் தனேஸ்வரி, விவேகானந்தம் யசோதரா (ஆசிரியை, மகளிர் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வித்யா, தீபா, வதனா, மயூரன், விபுலன், கோகுலன் ஜீவிகா, ஆகியோரின் அன்பு மாமியாரும் கோபி, லவன் ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும்,மூ. பரமேஸ்வரன் மூ. மகேஸ்வரன் ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை சனிக்கிழமை (16-6-90) காலை 9 மணிக்கு சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

மகளிர் கல்லூரி வீதி,
சாவகச்சேரி.

பொ. சதானந்தன்
06290

### அனுராதபுரத்தில்......

சென்ற இராணுவம் அங்கிருந்த ஊழியர்களை டிப்போவை விட்டு வெளியேறுதல் உசிதம் எனக் கூறியதாகவும் அதனையடுத்து ஊழியர்கள் அச்சம் காரணமாக வெளியேறியத்தாகவும் முரசொலிக்கு நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் தந்தன.

பின்னர் இராணுவத்தினர் அங்கிருந்து சில பஸ்களை தமது துருப்புகளை தெற்கிலிருந்து வவுனியாவுக்குக் கொண்டுவர எடுத்துச் சென றதாகவும் அறியவருகிறது.

(ஸ்ரீ)

### கிளிநொச்சி......

கடைகள்யாவும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

கிளிநொச்சி ஊடான போக்குவரத்துயாவும் துண்டிக்கப்பட்டதுடன் விமானக் குண்டுத்தாக்குதலால் நகர் கந்தசாமி கோயில் புகையிரத நிலையம் கடைகள் வீடுகள் என்பன சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மருத்துவமனை மூடப்பட்டதுடன் மின்சாரம் குடிநீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன் பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளின் கைவசம் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (35)

# சிறிய செய்திகள்

### மீண்டும் அந்தநாள் அச்சம்

யாழ்.குடா நாட்டில் மீண்டும் பதுங்கு குழிகள் வெட்டுவது துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

பலரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இதனை மேற்கொண்டுள்ளனர். (39]

### ஆனையிறவு நோக்கி.....

ஆனையிறவுத் தடை முகாமை நோக்கித் தென்மராட்சிப் புலிகளின் அதிரடிப் பிரிவுகள் இரண்டு விரைவதாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

### 'நிதர்சனம்' ஆரம்பம்

விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி சேவையான 'நிதர்சனம்' ஒளிபரப்பு நேற்று முதல் பரீட்சார்த்த சேவையாக ஆரம்பமாகியுள்ளது.

### 45 போராளிகள் வீரமரணம்

கடந்தசில தினங்களாக நிகழ்ந்து வரும் மோதல்களில் 45 போராளிகள் வீரமரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ(

### புலிகள் வசம்

திருமலை கிண்ணியாவில் உள்ள பொலிஸ் நிலையம் உட்பட இரு பொலிஸ் நிலையங்களும் புலிகள் வசம் வந்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி இராணுவ முகாம் தாக்கப்பட்ட சமயம் மூன்று இராணுவசிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் பன்னிரண்டு பேர் காயமடைந்ததாகவும்அரசாங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வட்ட அவை

இன்று காலை ஒன்பது மணிக்கு கில்னர் ஒழுங்கையில் உள்ள விடுதலைப் புலிகள் வட்டஅவைகாரியாலயத்திற்கு சகல வட்டஅவை உறுப்பினர்களும் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### இரத்ததானம்

யாழ் நகரப் பாடசாலை மாணவர்கள்நேற்றைய தினம் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தார்கள்.

கிளிநொச்சி தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு இரத்தம் வழங்கவே மேற்படி இரத்ததானம் மேற் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (03)

# திருமலை ரூபனுக்கு ராணுவம் பின்னிருந்து சுட்டது

நேற்றுமுன்தினம்மூதூரிலிருந்து தம்பலகாமம் நோக்கித் திரு. ரூபனும் மற்றும் சில போராளிகளும் வாகனம் ஒன்றிற் சென்று கொண்டிருக்கையில் 13 ம் கட்டையில் உள்ள இராணுவ முகாமுக்கு அருகே அவர்களுக்குப் பின்னால் லொறியில் வந்த இராணுவம் புலிகளின் வாகனத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

மின்னல் வேகத்தில் வாகனத்திலிருந்து வெளியே பாய்ந்த சங்கிலி, சுதன் என்ற இருபோராளிகளும் இராணுவத்தை எதிர்த்து நேரடியாக மோதின்ர், அடுத்து வீரமரணத்தை அவர்கள் எய்த நேரிட்டது.

இச்சம்பவத்தின் போது திரு. ரூபனுக்கு முதுகிற் காயம் ஏற்பட்டது.மற்றொரு போராளியும் காயமடைந்தார். (ஸ்ரீ

### இந்திய ...

இராணுவ வழிமுறைகள் அல்லாது ஏனைய வழிமுறைகளை கையாண்டே தற்போதைய நிலைமைகளை கையாள முடியும் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### ஆறாவது......

ம்பில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவித்தார்.

'வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கான புதிய தேர்தல் நடத்தப்படும்' என்றும் அவர் சொன்னார். (ஸ்ரீ)

### கிளி. இராணுவம்......

கொல்லப்பட்டுள்ளனர். எண்ணிக்கை தெரியவரவில்லை.

இத்தாக்குதலின் போது 17 புலிகள் காயமுற்றதாகப் பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

ஷெல் தாக்குதலால் பத்து பொதுமக்கள் காயமடைந்து யாழ்.பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிஞ்சாத்தீவு உப்பளத்துக்கு அருகில் உள்ள நீர்த்தாங்கியும் ஷெல்லினால் சேதமுற்றது.(03-ஸ்ரீ)

### தற்போதைய......

என பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட்கிளஸ்டன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் குறித்து மகிழ்ச்சியடைய முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான உபகரணங்களுக்காக முதற்கட்டமாக 635000 பவுண்களும் யாழ் ஆஸ்ப்பத்திரிக்கு 20 லட்சம் பவுண் பெறுமதியான உபகரணங்களும் வழங்கப்படும் எனவும்.

நெடுஞ்சாலை செப்பனிடுவதற்காகவும் மொனராகலை அம்பாறை, வவுனியா, பகுதி நெடுஞ்சாலைகளை புனரமைக்கவும், நிதிஉதவி வழங்கப்படும் என தெரிவித்த பிரிட்டிஷ தூதுவர் அமைதி நிலவினால் மட்டுமே இந்நிதி உதவி வழங்கப்படும் என்றார்,

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட்;திருவனந்திரைால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6ஜீல இலக்கத்திலுள்ள அச்சகப்பதிப்பில் 15-06-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது